குச்சவெளி பிரதேச சபை

திருகோணமலை மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுகள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 ஏப்ரல் 19 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 13 மே 2016 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 செப்தெம்பர் 29 ஆம் திகதி சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து குச்சவெளி பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 12 வருடங்களுக்கான இறைச்சிக்கடை குத்தகை ரூபா 2,966,529 தொகையான நிலுவைகள் மீளாய்வாண்டின் இறுதிவரை அறவிடப்படாது நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டு வருகின்றது.

(ஆ) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் நிலுவையாகக் காணப்படும் ரூபா 1,042,614 கூட்டுமொத்த தொகையான அங்காடிச்சந்தை மற்றும் வாகன வாடகை, வங்கி வட்டி மற்றும் மூலதன வட்டி என்பவற்றை அறவீடு செய்ய மீளாய்வாண்டின் இறுதிவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) 32 ஆண்டுகளுக்கு முன்னர் கடமையை விட்டு விலகிய 05 ஊழியர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பிணை வைப்பு ரூபா 8,500 கூட்டுமொத்த தொகையை மீளளிப்பதற்கு அல்லது ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ரூபா 7,591 தொகை பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணமாக 2005 ஆம் ஆண்டு தொடக்கம் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டு வருகின்ற போதிலும் அதனை இனங்கண்டு கொடுத்துத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 1996 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையான காலத்துக்குரிய செலுத்தப்படாத சம்பளங்களும் கூலிகளும் ரூபா 442,426 தொகையை கொடுத்துத் தீர்ப்பதற்கோ அல்லது

ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கோ மீளாய்வாண்டின் இறுதிவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பின்வரும் ஒவ்வொரு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா. | |
| செலுத்தப்படாத சம்பளங்களும் கூலிகளும் | 299,018 | விபரப் பட்டியல் |
| அரசிறையின் பேரிலான வைப்பு | 156,649 | வைப்புப் பதிவேடு |

1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்கி ஒழுகாத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்பு |
|---|---|
| (அ) 1988ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி நிர்வாக ஒழுங்கு விதி அத்தியாயம் ஐ பிரிவு 5(ஓஐஐ) | பணம், களஞ்சியப்பொருட்கள் மற்றும் காசோலைகளில் கையொப்பம் இடல் என்பவை மூன்று உத்தியோகத்தர்களுக்கு நிர்வாக ரீதியாக ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களிடமிருந்து பாதுகாப்பு பிணை பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| (i) இல 396 | ஆறு மாதங்களுக்கு முன்னர் வழங்கப்பட்ட, ஆனால் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 339,531 கூட்டுமொத்தப் பெறுமதியான 27 காசோலைகள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) இல 571 | இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 12,423,015 தொகையான வைப்புக்கள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி சபையின் செயற்பாடுகள் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 19,987,430 விளைவித்திருந்ததுடன் அதற்கு முன்னைய ஆண்டின் செலவினத்திலும் கூடிய வருமானமாக ரூபா 34,820,840 விளைவித்திருந்தமை நிதிசார் விளைவுகளில் ரூபா 14,833,410 பின்னடைவைக் காட்டுகின்றது.

2.2 வருமான முகாமைத்துவம்

-------------------------------------------

2.2.1 வருமான சேகரிப்பு செயலாற்றல்

-------------------------------------------------------

சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், வருமான நிலுவை என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | 2016 திசெம்பர் 31இல் நிலுவை மீதி |
|---|---|---|---|
| - - - - - - | - - - | - - - | - - - - |
| - - - - - - | - - - | - - - | - - - - |
| - - - - - - | - - - | - - - | - - - - |
| - - - - - - | - - - | - - - | - - - - |
| - - - - - - | - - - | - - - | - - - - |
| - - - - - | - - - | - - - | - - - - |
| | - - | - - | - - - - - |
| | & ஞ “)ooo(” | & ஞ “)ooo(” | & ஞ “)ooo(” |
| வீதவரிகள் | 6,270 | 6,185 | 6,649 |
| வாடகை | 4,166 | 3,810 | 3,319 |
| அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 1,260 | 1,372 | 4 |
| சேவைகளுக்கான கட்டணம் | 140 | 150 | 4 |
| உரிமங்கள் | 10,881 | 14,399 | 8,199 |

2.2.2 வீதவரிகள் மற்றும் வரிகள்

---------------------------------------------

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசசபைகள் அதிகாரச் சட்டத்தின் 134 ஆம் பிரிவுக்கு அமைய சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் என்பவற்றின் மீது 2005 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிடப்பட வேண்டிய ரூபா 6,646,115 கூட்டு மொத்தமான வீதவரிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

3.1 முகாமைத்துவப் பலவீனம்

------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஏனைய நிறுவனங்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட 08 வாகனங்கள் ஆறு வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக சபையினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதிலும் அவற்றை சபையின் பெயருக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பொதுநிர்வாக அமைச்சின் 03/2017 ஆம் இலக்க 2017 ஏப்பிரல் 19 ஆம் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் சகல அலுவலகங்களிலும் நேரப்பதிவு இயந்திரம் பொருத்தப்பட்டு ஊழியர்களின் உள்வருகை மற்றும் வெளிச்செல்கை உறுதிப்படுத்தப்பட வேண்டுமென கூறப்பட்ட போதிலும் சபையில் அவ்வாறான இயந்திரம் பொருத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) 2009 ஆம் ஆண்டில் புல்மோட்டை அகதிமுகாமில் தங்கியிருந்தவர்களுக்காக சபையினால் மீள்குடியேற்ற அமைச்சு சார்பாக மேற்கொண்ட நலன்புரிச் சேவைகளுக்காக செலவு செய்யப்பட்ட ரூபா 2,354,448 தொகை அந்த அமைச்சிடமிருந்து இன்றுவரை மீளப்பெறப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆம் ஆண்டு வரை வங்கியில் வைப்புச் செய்யப்பட்டு தேறப்படாத 05 காசோலைகளின் ரூபா 15,605 கூட்டுமொத்த தொகையை உரிய நபர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) குழாய் நீர் விநியோகத் திட்டம் தொடர்பாக சனசமூக நிலையங்களுக்கு 2013 ஆம் ஆண்டில் முற்பணமாக வழங்கப்பட்ட ரூபா 700,000 தொகையை மீளப்பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) சபையிலிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற மற்றும் சேவையை விட்டு விலகிச் சென்ற 10 ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 273,545 தொகையான நிலுவைக் கடனை அவர்களிடம் அல்லது அவர்களின் பிணையாளர்களிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) சபையினால் பயன்படுத்தப்பட்டு வந்த பிக்கப் வாகனம் 2015 ஆம் ஆண்டு விபத்துக்குள்ளாகி முழுமையாக சேதமடைந்திருந்த போதிலும் நிதிப்பிரமானம் 104 இன் பிரகாரம் விசாரணைக்குழுவை நியமித்து இழப்புக்களின் பெறுமதி, மற்றும் விபத்துக்கு பொறுப்பான நபர்களை இனங்காணல் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஏ) 2002 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிகளில் சபையின் ஊழியர்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 3,744,138 மொத்தத் தொகையான முற்பணங்களை மீளப்பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் 2014 நவம்பர் 12 ஆம் திகதிய 25/2014 இலக்க சுற்றறிக்கையின் 7 ஆம் பந்தியின் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்கத்தின் முன் அனுமதியின்றி சபையின் செயலாளரினால் 2015 ஆம் ஆண்டில் 140 ஊழியர்களுக்கு அமைய அடிப்படையில் நியமனம் வழங்கப்பட்ட போதிலும் அவ்வாறு ஊழியர்களை நியமிப்பதற்கான தேவைப்பாடு சபையில் காணப்படவில்லை. மேலும் இவ்வூழியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்காக சபையின் முன்னாள் செயலாளரால் 2015 ஆம் ஆண்டு பெறப்பட்ட ரூபா 1,493,294 தொகையான முற்பணம் மீளாய்வாண்டின் இறுதிவரை சீர்செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஒ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 149 இன் பிரகாரம், பிரதேச சபையின் எல்லைக்குள் செயற்பட்டுவரும் சுற்றுலா விடுதிகளின் ஆண்டு வருமானத்தில் 01 சதவீதத்தை உரிமத் தீர்வையாக சபை அறவிடுதல் வேண்டும். எனினும் சபையின் எல்லைக்குள் செயற்பட்டுவரும் சுற்றுலா விடுதிகளை இனங்கண்டு உரிமத் தீர்வை அறவீடு செய்ய சபை இன்றுவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஓ) 2015 ஆம் ஆண்டின் ரூபா 301,901 தொகை செலவு செய்யப்பட்டு உள்ளக தொலைத்தொடர்பு இணைப்பு (Intercom System) பொருத்தப்பட்ட போதிலும் அது பொருத்தப்பட்டு ஒரு மாத காலத்திற்குள் செயலிழந்திருந்தும் அதைத் திருத்தி பயன்படுத்துவதற்கான நடவடிக்கையினை சபை இன்றுவரை எடுத்திருக்காததுடன் அதற்குரிய மாதாந்த வாடகை இன்றுவரை ரூபா 10,170 மொத்தத் தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஔ) நிதி ஆணைக்குழுவின் 2016/01 ஆம் இலக்க 2015 திசெம்பர் 30 ஆம் திகதிய சுற்றறிக்கையின் 1.2 ஆம் பந்தியின் பிரகாரம் மாகாண மற்றும் உள்@ராட்சி அதிகார சபைகள் வீதிகளை அமைக்கும் போது கிரவல் போடுதல் போன்ற தற்காலிக பாதை அமைத்தலை தவிர்த்து அதிக காலம் பயன்படுத்தக்கூடிய வகையில் கார்பட் இடுதல், தார் G+சுதல் அல்லது கொங்கிரீட் இடுதலை மேற்கொள்ள வேண்டும் எனக் குறிப்பிட்டிருந்த

போதிலும் அதற்கு முரணான வகையில் சபையினால் அல்ஹஸா வீதிக்கு ரூபா 1,622,974 பெறுமதியில் கிரவல் இடப்பட்டிருந்தது.

(அஅ) மோட்டார் வாகன போக்குவரத்து சட்டத்தின் பிரிவு 203 இன் பிரகாரம் ஆண்டு தோறும் சகல வாகனங்களுக்கும் வருமான உத்தரவுப் பத்திரம் பெறப்படல் வேண்டும். எனினும் சபையினால் பயன்படுத்தப்பட்டு வரும் 05 வாகனங்களுக்கு வருமான உத்தரவுப் பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(அஆ) தலைமைச் செயலாளர் செயலகச் சுற்றறிக்கை 10/2009 பிரிவு (2) இன் பிரகாரம் வருடாந்த இருப்புக் கணக்கெடுப்பு சபைக்கான கொடுப்பனவு தலைவருக்கு ரூபா 5,000 படியும் அங்கத்தவர்களுக்கு தலா ரூபா 4,000 படியும் வழங்க முடியும். எனவே 2015 ஆம் ஆண்டிற்கான கொடுப்பனவாக கூட்டுமொத்தமாக ரூபா 13,000 தொகையே வழங்கியிருக்க வேண்டும். எனினும் சபை ரூபா 25,000 தொகையை வழங்கியமையால் ரூபா 12,000 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

(அஇ) ஓய்வூதிய திணைக்களத்தின் 2011 பெப்ரவரி 24 ஆம் திகதிய 02/2011 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 4.1 ஆம் பிரிவின் பிரகாரம் உள்@ராட்சி நிறுவனங்களில் அமைய மற்றும் தற்காலிக அடிப்படையில் நியமிக்கப்பட்ட ஊழியர்களுக்காக அரச சேவை சேமலாப நிதியத்திற்கு பங்களிப்பு பணம் செலுத்தப்படுதல் வேண்டும். எனினும் இதற்கு மாற்றமாக சபையில் கடமையாற்றிய ஊழியர்களுக்காக அரச சேவை சேமலாப நிதியத்திற்குப் பதிலாக ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புச் செய்யப்பட்டதுடன் 2010 சனவரி தொடக்கம் 2014 நவம்பர் மாத காலத்திற்கான ஊழியர் சேமலாப நிதியத்துக்கான பங்களிப்புப் பணத்தை குறித்த காலத்தில் செலுத்தாத காரணத்தினால் அந்நிதியம் ரூபா 1,915,306 தொகையான தண்டப்பணத்தை செலுத்துமாறு வேண்டியிருந்தது.

(அஈ) பிரதேச சபையினால் புல்மோட்டையில் ரூபா 24,444,588 செலவில் 35 கடைகள் கொண்ட சந்தைக் கட்டிடம் புல்மோட்டை வாவியில் மண் நிரப்பப்பட்டு நிர்மாணிக்கப்பட்டமையினால் மத்திய சுற்றாடல் அதிகார சபை, கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் போன்றவை அனுமதி மறுத்திருந்ததுடன் எதிர்காலத்தில் அவர்களால் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டால் சபைக்கு பாரிய இழப்பு ஏற்படும்.

### 3.2 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

சபையின் தவிசாளர் 2015 பெப்ரவரி 05 ஆம் திகதியும், 2015 மார்ச் 23, 24 மற்றும் 25 ஆம் திகதிகளிலும் உத்தியோகபூர்வ ரீதியாக சபையின் அதிகார பிரதேசத்திற்குட்பட்ட உப அலுவலகங்களுக்கும் உள்@ராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்திற்கும் சென்றிருந்தமையானது அவர் அப்பிரயாணத்திற்காகப் பயன்படுத்திய அலுவலக வாகனத்தின் ஓட்டப்பதிவுப் புத்தகத்தின் குறிப்புக்கள் உறுதிப்படுத்திய போதிலும் அத்திகதிகளில் அவர் கொழும்புக்கு உத்தியோகபூர்வ ரீதியாக பயணம் செய்ததாகக் கூறி இணைந்த படிகளும் போக்குவரத்துப் படிகளுமாக ரூபா 43,100 தொகையினைப் பெற்றிருந்தார்.

### 3.3 ஒப்பந்த முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதி ஒதுக்கீட்டின் சுற்றுலாத்துறை அபிவிருத்தி வேலைத்திட்டத்தில் ரூபா 1,004,500 தொகைக்கு கொக்குளாய் கடற்கரையில் 07 சூரிய சக்தி விளக்குகள் 2016 திசெம்பர் மாதம் பொருத்தப்பட்டிருந்தது. ஆயினும் ரூபா 430,500 பெறுமதியான 03 விளக்குகள் 05 மாத காலமாக பழுதடைந்து காணப்பட்ட போதிலும் அவற்றை திருத்துவதற்கு சபையினால் இன்றுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) குறித்தொதுக்கப்பட்ட அடிப்படையிலான நிதி ஒதுக்கீட்டின் கீழ் கட்டுக்குளத்தில் பொதுக்கிணறு ஒன்றை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் ரூபா 316,460 தொகைக்கு ஒரு சனசமூக நிலையத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பான பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) இப்பொதுக்கிணறு அமைப்பதற்கான காணி சபையிடம் காணப்படாமையினால் தனியார் ஒருவருக்கு சொந்தமான காணியில் கிணறு அமைக்கப்பட்டிருந்தது.

(ii) ஒப்பந்தகாரரால் 2016 திசெம்பர் 23 ஆம் திகதி இவ் வேலை பூர்த்தி செய்யப்பட்டு சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. எனினும் கணக்காய்வின் போது இப்பொதுக்கிணறு அக்காணி உரிமையாளரால் சுற்றுவேலி அமைக்கப்பட்டு அவரது தனிப்பட்ட பாவனைக்கே பயன்படுத்தப்பட்டு வருகின்றது. எனவே இக்கிணறு நிர்மாணிக்கப்பட்ட நோக்கம் அடையப்படவில்லை.

(இ) திண்மக் கழிவு சேகரிப்பு நிலைய கட்டிட நிர்மாணம்

------------------------------------------------------------------------------------------

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பிலிசரு திட்டத்தின் கீழ் திண்மக்கழிவு சேகரிப்பு நிலையத்தை நிர்மாணம் செய்வதற்கான ஒப்பந்தம் ரூபா 4,946,825 தொகைக்கு சில்மியா ஒப்பந்தகாரருக்கு 2015 ஒக்தோபர் 19 ஆம் திகதி வழங்கப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) இத்திண்மக்கழிவு நிலையத்திற்கான கட்டடத்தை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்ட போது இக்கட்டடத்திற்கான மின்சாரம் வழங்கல், நீர் விநியோகம் மற்றும் சுற்றுவேலி அமைத்தல் போன்ற வேலைகள் மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. எனவே இக்கட்டிட வேலை பூர்த்தி செய்யப்பட்ட பின்னரும் பயன்படுத்த முடியாத நிலை ஏற்படும்.

(ii) இவ்வேலை 2015 திசெம்பர் 19 ஆம் திகதி ஒப்பந்தக்காரரால் நிறைவு செய்யப்பட்டு சபைக்கு கையளிக்கப்பட்டிருத்தல் வேண்டும். எனினும் கணக்காய்வுத் திகதியான 2017 மே 16 ஆம் திகதி வரை ஒப்பந்தக்காரர் நிர்மாண வேலைகளை நிறைவு செய்யாது கைவிட்டமையினால் ரூபா 2,947,682 தொகை செலவு செய்யப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட இக்கட்டடம் விளைவற்ற செலவினமாக மாறியுள்ளது. அத்துடன் திண்மக்கழிவு சேகரிக்கும் முகாமைத்துவ செயற்பாடுகளையும் சபையினால் முன்னெடுக்க முடியாது காணப்படுகின்றது.

(iii) சபையின் எல்லைக்குள் சேகரிக்கப்படும் குப்பைகள் புல்மோட்டையில் உள்ள தனியார் காணி ஒன்றில் கொட்டப்பட்டு வருகின்றமையினால் அப்பகுதியில் சூழல் பிரச்சனைகள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பம் காணப்படுகின்றது.

3.4 பயன்படுத்தப்படாமலுள்ள சொத்துக்கள்

------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபையில் காணப்படும் 02 உழவு இயந்திரம், பிக்கப், மோட்டார் சைக்கிள், டிப்பர் மற்றும் JCB இயந்திரம் என்பன திருத்தம் செய்து பயன்படுத்தக் கூடிய நிலையில் காணப்படுகின்ற போதிலும் 01 தொடக்கம் 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக திருத்தம் செய்து பயன்படுத்த சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பிலிசரு திட்டத்தின் கீழ் திண்மக்கழிவு சேகரிப்பு நிலையம் நிலாவெளியில் ரூபா 17,943,879 தொகையில் நிர்மாணிக்கப்பட்டு 2016 khu;r; 26 ஆந் திகதி சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் இன்று வரை திண்மக்கழிவு சேகரிப்பு முகாமைத்துவ செயற்பாடுகளை மேற்கொள்ள சபை நடவடிக்கை எடுத்திருக்காமையினால் செய்யப்பட்ட செலவினம் விளைவற்றுக் காணப்படுகின்றது.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

----------------------------------------------------------------

பதிலளிக்கப்படாத ஐயவினாக்கள்

------------------------------------------------------

2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் எமது திணைக்களத்தினால் அனுப்பப்பட்டு 14 நாட்களுக்குள் பதிலளிக்கக் கோரியிருந்த மூன்று ஐயவினாக்கள் தொடர்பாக இன்றுவரை பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

5. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் ஒவ்வொரு கட்டுப்பாடுகளிற்கு எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் மீது விசேட கவனம் செலுத்த வேண்டும்.

| கட்டுப்பாடுகள் | விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) பேரேடுகள் நாளது வரையாக முறையாக பேணப்படுதல் வேண்டும். |
| | (ii) சொத்துக்கள் செலவீனங்களின் தன்மை அடிப்படையில் வகைப்படுத்தப்படுதல் வேண்டும். |
| (ஆ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | (i) நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படுதல் வேண்டும். |
| | (ii) களஞ்சியப் பேரேடு முறையாகப் பேணப்படல் வேண்டும். |
| (இ) வருமான அறவீட்டு முகாமைத்துவம் | வருமான நிலுவைகளை அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |